# 30 வது ஆண்டறிக்கை

01.04.2019 - 31.03.2020

## நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட.....



## நிகழ்வுகள்:

காலை 09.30 மணி – வரவேற்பு மற்றும் பதிவு செய்தல்

காலை 10.00 மணி – துவக்க ஜெபம் (சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள்)

- வரவேற்புரை
- ஆண்டு அறிக்கை
- 30 – ம் ஆண்டு அறிக்கை
- நிதி நிலை அறிக்கை
- அறிக்கை மீதான விவாதங்கள்
- நிறுவன தலைவர் உரை
- நன்றியுரை

மக்கள் அமைப்பு மூலம் கிராமப்புற மக்களிடையே
தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சியை உருவாக்குதல்.



# இயக்குனர் உரை



இந்த உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இறைசாயலில் படைக்கப்பட்டிருப்பதால் தன்மானத்தோடும், தன்னிறைவோடும், தன்னாட்சியோடும் மனித உரிமைகளோடும், சுதந்திரத்தோடும் எல்லாமும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ அழைக்கப்பட்டுள்ளனர். "நான் வாழ்கிறேன் அதுபோல நீங்களும் வாழ்வீர்கள்" என்றார் நல்ல சமாரியன் இயேசு. தேவையில் உள்ள முகம் தெரியாத, முன் பின் அறியாத, குற்றுயிரும் கொலைஉயிருமாய் கிடந்த ஒருவனை அக்கறையோடு எடுத்து வாரிக்கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்து அவன் உயிரை காப்பாற்றிய அந்நல்ல சமாரியனை உதாரணம் காட்டி, அவனைப்போல நாமும் வாழ வேண்டும் என்று சொன்ன இயேசுவின் உயிருள்ள வார்த்தைகளை உள்ளத்தில் ஏற்று உலகம் முழுவதும் தேவையில் உள்ள மனிதர்களுக்கெல்லாம் தன் இருகரத்தை நீட்டி சகோதர உணர்வோடு அனைவருக்கும் பணி செய்து வருகின்றது நம் அன்னையாம் திருச்சபை. இயேசுவின் வாழ்வளிக்கும் வார்த்தைகளையும், கத்தோலிக்க திருஅவையின் சமூக கோட்பாடுகளையும் சரிவர உள்வாங்கி கடந்த 29 ஆண்டுகளாய், இந்த செங்கை மண்ணில் மனிதநேய செயல்களின் மூலம் இறையாட்சி பணியை திறம்பட செய்து வருகின்ற செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் சமூகப்பணிகள் அனைத்தும் பாராட்டுக்குரியது: வியப்புக்குரியது. இயக்கமாய் இணைந்து பல அறப்போராட்டங்களை நிகழ்த்தி, மண்ணுரிமைக்காகவும், பெண்ணுரிமைக் காகவும், ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகவும், இழந்துபோன உரிமைகளை மீட்கவும் இந்நிறுவனம் மேற்கொள்ளும் பணிகள் ஏராளம். இப்பணிகளை முனைப்புடன் செய்ய பெரும் உதவியாய் இருக்கும் எம் செங்கை மறைமாவட்டம், அதன் இதயமாய் இருக்கும் பாசத்திற்குரிய எம் நிறுவன தலைவர் ஆயர் அ.நீதிநாதன், இணைத்தலைவர் பேரருட்தந்தை .ஞா.பாக்கியரெஜிஸ், பொருளர் பணி. ஜார்ஜ் ஸ்டீபன், ஆயரின் ஆலோசனைக்குழு தந்தையர்கள், காரிதாஸ் இந்தியா நிறுவனம், தமிழ்நாடு சமூகசேவை மையம், கோல்பிங் இந்தியா, நபார்டு வங்கியின் நாபின்ஸ் நிதி நிறுவனம், மற்ற உபகாரிகள், பங்குத் தந்தையர்கள், செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், கால நேரம் பாராது உழைக்கும் எம் நிறுவன பணியாளர்கள், அனைத்து செயல்பாடுகளிலும் துணைநிற்கும் எம் இலக்கு மக்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள். நமது மறைமாவட்டத்திற்கு செங்கல்பட்டு கிராமம்புற மேம்பாட்டுச் சங்கம் இறைவனின் ஒரு தனிப்பெரும் கொடை. அதை பாதுகாப்பது, வளர்ப்பது, தன்னிறைவை நோக்கி அழைத்துச் செல்வது நமது அனைவரின் கடமையாக உள்ளது. அயல்நாட்டு நிதிஉதவிகள் எதுவும் கிடைக்கப்பெறாத இச்சூழலில் உள்ளூர் உபகாரிகளை ஊக்குவிப்போம்... நல்ல உள்ளம் படைத்தவர்களை நம் நிறுவனத்திற்கு அறிமுகம் செய்வோம்... நம் மறைமாவட்ட ஆயரோடு இணைந்து செயல்பட்டு ஒருவரை ஒருவர் தாங்கி, இறையாட்சியை இம்மண்ணில் கட்டி எழுப்புவோம். இறைவன் நம்முடைய நல்ல செயல்களில் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக....சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் நமது நிறுவனம்: இது நமது இலக்கு மக்களுக்கான நிறுவனம் என்பதை மனதில் கொண்டு இன்னும் பலரை வாழவைக்க கரம் இணைவோம்... புது உலகம் படைத்திடுவோம்..

விளிம்புநிலை மக்களை மையமாக்கும் பணியில்
**பணி. இ. அந்தோணிராஜ்**
இயக்குநர் மற்றும் செயலர்
செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்.

# 30வது ஆண்டறிக்கை
(01.04.2019 முதல் 31.03.2020)

## முன்னுரை:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990-ம் ஆண்டு அரசின் வழியாக முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 29 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள கிராமப்புற நலிவடைந்த மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 10 ஒன்றியங்கள், 124 குக்கிராமங்கள், 604 மகளிர் குழுக்கள், 39 மாற்றுத்திறனாளி குழுக்கள் என 8227 மகளிர் குழு உறுப்பினர்களையும், 345 மாற்றுத்திறனாளி குழு உறுப்பினர்களையும் வழிநடத்தி வருகின்றது. மேலும் தனது பணித்தளத்தில் உள்ள நலிவடைந்த மக்கள் மற்றும் தலித் மக்கள் வாழ்வியல் முன்னேற்றத்திற்காகவும், தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சி அடையச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு அவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி, வருமான பெருக்கு திட்டப்பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்து வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 வரையிலான பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் பற்றிய அறிக்கையினை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## சி.ஆர்.டி.எஸ்
### நிறுவனத்தின் பணித்தளங்கள்
### ஒன்றியங்கள்

- அச்சிறுப்பாக்கம்
- இலத்தூர்
- சித்தாமூர்
- காட்டாங்கொளத்தூர்
- காஞ்சிபுரம்
- மதுராந்தகம்
- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்

## நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

- காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்பு திட்டம் (Caritas India - CMDRR)
- கோல்பிங் இந்தியா திட்டம் (Kolping India)
- புதிய கண்ணோட்டம் (New Thrust)
- நாபின்ஸ் நுண்கடன் திட்டம் (Nabfins)
- இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டு திட்டம் (Lic – Group Insurance)
- சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் (Community Based Rehabilitation)
- காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் - புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம் (Cancer Awarness)
- பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)





### 1.காரிதாஸ் இந்தியா – சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத் திட்டம் (Caritas India - CMDRR)

பேரிடர் காலங்களில் அதிகமாக பாதிக்கப்படும் மாவட்டங்களில் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களும் உள்ளன. நீர் ஆதாரங்கள் சரியாக பராமரிக்கப்படாததும், மக்களுக்கு பேரிடர் பற்றிய போதுமான முன்னறிவு இல்லாததும், பேரிடர் குறைக்கும் முயற்சியில் மக்களுடைய பங்கு மிகவும் குறைவாக இருப்பதுவுமே இதற்கு முக்கிய காரணங்கள் ஆகும்.

### நோக்கம்:

- பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தாங்கள் வாழுகின்ற இடங்களிலுள்ள சாதக, பாதக சூழல்கள் பற்றிய விழிப்புணர்வை பெற செய்தல்.
- ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை உருவாக்குதல்.
- இயற்கையின்மீது மக்களுக்கு அக்கறை உருவாக்குதல்.
- பேரிடர் காலங்களில் தாங்கள் பெற்றுக்கொண்ட முன்னறிவு, விழிப்புணர்வு போன்றவைகளின் மூலம் பேரிடர் காலங்களில் சேதாரத்தை குறைத்தல்.
- பேரிடர் காலங்களில் மக்களின் பங்களிப்பு மற்றும் பணிகள் குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துதல்.

இத்திட்டத்தின் வழியாக நமது நிறுவனமானது 25 கிராமங்களை தேர்வு செய்து பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு பயிற்சிகள், சாதக, பாதக சூழ்நிலைகளுக்கான கிராம வரைபடம் வரைதல், பேரிடர் மீட்புக்குழு உருவாக்கம், மீட்புக்குழுவின் பணிகளை கிராம மக்களுக்கு தெரிவித்தல், பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் விழிப்புணர்வு அளித்தல், சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு அளித்தல், பஞ்சாயத்து ராஜ் அமைப்பு பற்றிய புரிதல் மற்றும் அரசு திட்டங்களை முறையாக பயன்படுத்துதல் போன்ற பல பயிற்சிகளை வழங்குகின்றது.

சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 ஒன்றியங்களிலுள்ள 25 கிராமங்கள் மற்றும் மீட்புக்குழு உறுப்பினர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒன்றியம் | கிராமங்கள் | மீட்புக்குழு உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1 | மதுராந்தகம் | கீழ்ப்பட்டு | 12 |
| | | தச்சூர் | 12 |
| | | மலைப்பாளையம் | 12 |
| 2 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | 12 |
| | | மேலச்சேரி | 12 |
| 3 | காஞ்சிபுரம் | விப்பேடு | 12 |
| | | முத்துவேடு | 12 |
| 4 | இலத்தூர் | விழுதமங்களம் | 12 |
| | | உடல்காரகுப்பம் | 12 |
| 5 | திருப்போரூர் | சிறுதாவூர் | 12 |
| | | ஒரகடம் | 12 |
| 6 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | 12 |
| | | மாதாகோவில் | 12 |
| | | நல்லாத்தூர் | 12 |
| | | கொக்கிலமேடு குப்பம் | 12 |
| | | உதயம்பாக்கம் | 12 |
| | | வெண்புருஷம் காலனி | 12 |
| 7 | உத்திரமேரூர் | அம்மையப்பநலலூர் | 12 |
| | | மல்லிகாபுரம் | 12 |
| 8 | சித்தாமூர் | வேட்ரம்பாக்கம் | 12 |
| 9 | வாலாஜாபாத் | புதுகாலனி | 12 |
| | | தர்மநாயக்கனபட்டறை | 12 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | 12 |
| | | நேமம் | 12 |
| **மொத்தம்** | **10 ஒன்றியங்கள்** | **25 கிராமங்கள்** | **300 உறுப்பினர்கள்** |

## 2. கோல்பிங் இந்தியா (**Kolping India**)




செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் ஓர் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமான "கோல்பிங் இயக்கம்" செயல்பட்டுக்கொண்டு வருகின்றது. கடந்த 16 ஆண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 40 பங்குகளில் 74 கோல்பிங் குழுக்கள் (இஸ்லாமிய சிறுபான்மை யினர் சகோரத சகோதரிகளை உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 1179 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப பட்டுள்ளனர். இத்துடன் 6 பங்குகளில் 6 சிறார் குழுக்கள் உருவாக்கப்பட்டு 102 சிறுவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இத்திட்டத்தின் வழியாக கடந்த 16 ஆண்டுகளில் தங்களின் குடும்பம் மற்றும் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு கடன்பெற்று இதுவரை 1176 நபர்கள் சுழற்சி முறையில் பயன்பெற்றுள்ளனர். அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.67,33,850 ஆகும்.

## திட்டத்தின் குறிக்கோள்:



கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதி வாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

## நோக்கம்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தில் இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

## சமூக நல்லிணக்க செயல்பாடுகள்:

கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தி மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கு பங்கு தளங்கள் மற்றும் கிளைப்பங்குகளில் உள்ள பல்வேறு பொது சேவை பணிகளில் தன்னார்வமுடன் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது. தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக தங்கள் மத்தியில் உள்ள நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆதரவற்று இறக்கும் கத்தோலிக்க கிறித்தவர்களை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை துப்புரவு செய்தல் போன்ற பணிகளை சிறப்பாக கோல்பிங் இயக்கங்கள் செயல்படுத்திக் கொண்டுவருகின்றன.



## பொருளாதார செயல்பாடு:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி, ஒருமித்த கருத்துடன் செயல்பட்டு கல்வி, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்ற செயல்பாடுகளில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் ரூ.50 முதல் அதிகபட்கம் ரூ.500 வரை சேமிக்கிறார்கள். வங்கிகளில் கூட்டுக்கணக்கு துவங்கி நிதியினை பராமரிக்கவும், குழு உறுப்பினர்களின் தேவைக்கு ஏற்ப உள்கடன் வழங்கி தங்கள் தேவைகளை இவ்வாறு பூர்த்தி செய்து வருகின்றனர்.

## கோல்பிங் இறப்பு நிவாரண நிதி:

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்து காரணமாக இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்பு நிவாரண நிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு தனிநபர் ஒருவருக்கு ரூ. 5000 இறப்பு இழப்பீட்டுத்தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது.

| வ.எண் | கிராமம் | இறந்தவரின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | வடநெம்மேலி | திருமதி.மேரி | 5000.00 |

**கோல்பிங் இழப்பீடு நிவாரண நிதி:**

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் எதிர்பாராத விபத்துகளின் காரணமாக வீட்டையோ, உடமைகளையோ, பயன்படுத்தும் பொருட்களையோ இழக்க நேர்ந்தால் அவசர கால இழப்பீட்டுத் தொகையாக கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் மூலம் உதவித்தொகையாக ரூ.20,000 வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் இவ்வாண்டு ஒரகடம் பகுதியில் உள்ள மாரியம்மன் கோல்பிங் குழுவின் உறுப்பினர் திருமதி. அஞ்சாலை என்பவரது குடிசைவீடு தீப்பிடித்து முழுவதும் எரிந்து சேதமடைந்துவிட்டது. சேதமடைந்த வீட்டை புணரமைப்பு செய்வதற்காக கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் மூலம் ரூ.20,000 கோல்பிங் உறுப்பினருக்கு இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:**

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டு வருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடு கட்டும் திட்டம் (Housing support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் (Vocational Training Programme)
- தனிநபர் கழிவறை திட்டம் (Individual Toilet)

**வருவாய் பெருக்குத் திட்டம்: (Income Generation Programme)**

கோல்பிங் குழு உறுப்பினர்கள் சுயதொழிலை துவங்கவும், அல்லது ஏற்கனவே செய்துவரும் தொழிலை விரிவுப்படுத்தவும் இக்கடன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

2019-2020-ம் ஆண்டில் கோல்பிங் வருவாய் பெருக்குத் திட்டத்தின் (IGP) வழியாக பயனடைந்த பயனாளிகளின் விவரம் :

| வ.எண் | பயனாளி பெயர் | குழு மற்றும் கிராமத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | வியாகுலமேரி | சகாயமாதா கோல்பிங்குழு – ஒரகடம் | 10,000.00 |
| 2 | மீனா | லூர் து மாதா கோல்பிங்குழு – ஒரகடம் | 10,000.00 |
| 3 | பரமேஸ்வரி | செவ்வந்தி கோல்பிங் குழு - இருங்குன்றபள்ளி | 10,000.00 |
| 4 | பூங்கோதை | செவ்வந்தி கோல்பிங் குழு - இருங்குன்றபள்ளி | 10,000.00 |
| 5 | சாரதாம்மாள் | தாமரை கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 10,000.00 |
| 6 | சூசைமேரி | புனித சூசையப்பர் கோல்பிங்குழு – பெருங்கோழி | 10,000.00 |
| 7 | ஜாக்குலின்மேரி | புனித சூசையப்பர் கோல்பிங்குழு – பெருங்கோழி | 10,000.00 |
| 8 | டெய்சிராணி | கார்மேல்மாதா கோல்பிங் குழு – கோவளம் | 10,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 9 | வசந்தி | கார்மேல்மாதா கோல்பிங் குழு – கோவளம் | 10,000.00 |
| 10 | பிரியா | கார்மேல்மாதா கோல்பிங் குழு – கோவளம் | 10,000.00 |
| 11 | உஷா | மாதா கோல்பிங் குழு – விப்பேடு | 10,000.00 |
| 12 | சங்கீதா | மாதா கோல்பிங் குழு – விப்பேடு | 10,000.00 |
| 13 | சந்தியா | சகாயமாதா கோல்பிங் குழு – விப்பேடு | 10,000.00 |
| 14 | அஞ்சாலை | மாரியம்மன் கோல்பிங்குழு – ஓரகடம் | 10,000.00 |
| 15 | எல்லம்மாள் | மாரியம்மன் கோல்பிங்குழு – ஓரகடம் | 10,000.00 |
| 16 | சந்திரிகா | ஓம்சக்தி கோல்பிங்குழு – மேல்மணப்பாக்கம் | 10,000.00 |
| 17 | ரீட்டா | ஓம்சக்தி கோல்பிங்குழு – மேல்மணப்பாக்கம் | 10,000.00 |
| 18 | பரிமளா | ஓம்சக்தி கோல்பிங்குழு – மேல்மணப்பாக்கம் | 10, 000.00 |
| 19 | பிரிசில்லா | டோம்னிக் கோல்பிங்குழு – முத்துவேடு | 10,000.00 |
| 20 | ஆக்னஸ் | டோம்னிக் கோல்பிங்குழு – முத்துவேடு | 10,000 .00 |
| **மொத்தம்** | | | **2,00,000.00** |








என்னுடைய பெயர் திருமதி. மேரி ஆப்ரகாம். நான் பழவந்தாங்கல் பகுதியில் வசித்து வருகின்றேன். நான் தூய ஆவி கோல்பிங் குடும்பம் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எனக்கு ஒரு ஆண் மற்றும் பெண் குழந்தைகள் இருக்கின்றார்கள். இருவருக்கும் கடவுளின் துணையால் நல்ல வரன் பார்த்து திருமணம் செய்து விட்டேன். என்னுடைய கணவரின் சிறிய வருமானத்தினால் என் குடும்பத்தை வழிநடத்த முடியவில்லை. எனவே என் கணவருக்கு துணையாக சிறு தொழில் செய்யலாம் என முடிவெடுத்து என்னுடைய நகையை விற்று சின்ன மளிகை கடை ஒன்றை தொடங்கினேன். இக்கடையால் பெரிய வருமானம் எதுவும் வரவில்லை. என் ஊரில் தொடங்கப்பட்ட தூய ஆவி கோல்பிங் குடும்பம் குழுவில் இணைந்தேன். சி.ஆர்.டி.எஸ் மற்றும் கோல்பிங் இந்தியா இணைந்து நடத்திய வருமானப் பெருக்கு திட்டப் பயிற்சியில் கலந்துக்கொண்டேன். அந்த பயிற்சியின் உதவியால் முன்னேற்றம் அடைந்தேன். என்னுடைய தொழிலை விரிவுப்படுத்த எனக்கு ஒரு குறிப்பிட்ட தொகை தேவைப்பட்டது. எனவே தொழில் கடனுக்காக சி.ஆர்.டி.எஸ் - கோல்பிங் தனிநபர் வருமானப் பெருக்குத் திட்டத்திற்கு விண்ணப்பித்தேன். அதன் மூலம் ரூ.20000/- கடனாக 2018-2019 ஆண்டு பெற்றுக்கொண்டேன். அத்தொகையால் என் கடையில் அலைப்பேசி ரீசார்ஜ் வசதியை தொடங்கினேன். இதன் மூலம் நான் நாள் ஒன்றுக்கு ரூ.500/- யை இலாபமாக பெறுகிறேன். தற்போது இத்திட்டத்தின் கடன் உதவியால் வருமானம் பெருகி என் குடும்பத்தினை வழிநடத்த முடிகின்றது. என் குடும்பம் இப்பொழுது சந்தோஷமாக இருக்கின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கும் கோல்பிங் இந்தியா நிறுவனத்திற்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.





**கறவைமாடு வளர்ப்புத்திட்டம் : (Milch Animal Programme)**

கிராம மற்றும் நகர்புறபகுதியில் வாழக்கூடிய ஏழை, எளிய மக்களும் பயன்பெறும் வகையில் உருவானதுதான் கறவை மாடுகள் வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில் கறவை மாடுகள் வளர்பதற்கான அனுபவமும், ஆர்வமும் இருந்தால் மட்டும் போதும். இத்தொழிலை வெகுசுலபமாக செய்து வருமானத்தை ஈட்ட முடியும். மேற்கண்ட அனைத்து கோல்பிங் திட்ட கடன்களும் 6 சதவீத சேவைக் கட்டணத்துடன் ('100 ரூபாய்க்கு 0.50 பைசா') கடனை தவணை முறையில் வசூலித்து, கோல்பிங் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் வழியாக இவ்வாண்டில் பயன்பெற்ற பயனாளிகள் விவரம் பின்வருமாறு:**

| வ.எண் | பயனாளி பெயர் | குழு மற்றும் கிராமத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | மல்லிகா | செவ்வந்தி கோல்பிங்குழு – இருங்குன்ற பள்ளி | 15.000.00 |
| 2 | பாத்திமாமேரி | அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனிப்பாக்கம் | 15.000.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | மேரி | அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனிப்பாக்கம் | 15.000.00 |
| 4 | பிரேமா | புனித சூசையப்பர் கோல்பிங்குழு – பெருங்கோழி | 20,000.00 |
| 5 | சீனிவாசன் | கன்னியம்மன் கோல்பிங் குழு – ஓரகடம் | 20,000.00 |
| 6 | தேவகி | அன்னை தெரசா கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 20,000.00 |
| 7 | ஜோதி | தாமரை கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 20,000.00 |
| **மொத்தம்** | | | **1,25,000.00** |

## வீடுகட்டும் திட்டம்: (Housing Support Programme)



ஏழை, எளிய மக்கள் மற்றும் குடிசை வீட்டி வசிப்பவர்கள் சொந்தமாக கான்கிரீட் வீடுகட்டி வாழ வழிவகை இல்லாமல் குறைந்த அளவே முதலீடு வைத்துக்கொண்டு எவ்வாறு வீடுகட்டுவது என்று அல்லல்படும் குடும்பங்களை தேர்வு செய்து அவர்களும் சமூகத்தில் தரமான வீடுகட்டி வாழும் வகையில் கோல்பிங் இந்தியா நிறுவனம் வீடுகட்டும் திட்டத்தின் வழியாக ரூ.50,000 கடன் உதவி வழங்கி எளிய தவணையில் கடன்திருப்பம் செய்ய வழிவகை செய்கின்றது. இந்த கடன்தொகையில் 10 சதவீதம் மானியமாகவும், மீதித்தொகை மட்டும் கடன் தொகையாகவும் திருப்பி செலுத்த வேண்டும்.

| வ.எண் | பயனாளி பெயர் | குழு மற்றும் கிராமத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | சாந்தி | புனித அந்தோணியார் கோல்பிங் குழு – விப்பேடு | 50,000.00 |
| 2 | ஜெயந்தி | சவேரியார் கோல்பிங்குழு – நேமம் | 50,000.00 |
| 3 | ஆரோக்கியமேரி | குழந்தை தெரசா கோல்பிங் குழு – கடப்பாக்கம் | 50,000.00 |
| 4 | ஜாக்குலின் | சகாயமாதா கோல்பிங் குழு – ஒட்டியம்பாக்கம் | 50,000.00 |
| **மொத்தம்** | | | **2,00,000.00** |

## தொழிற்பயிற்சி கல்விக்கடன்: (Vocational Training Programme)

கோல்பிங் குழு உறுப்பினர்களின் மகன், மகள் தொழிற்பயிற்சி குறித்த படிப்புகள் படித்தால் அவர்களுக்கு கல்விக்கடனாக ஒரு மாணவ, மாணவியருக்கு ரூ.15,000 வீதம் கடன் வழங்கப்படுகிறது. இவ்வாண்டில் இத்திட்டத்தின் வழியாக பயன்பெற்ற பயனாளிகள் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பயனாளி பெயர் | குழு மற்றும் கிராமத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | லூர்துமேரி | புனித சூசையப்பர் கோல்பிங்குழு – பெருங்கோழி | 15,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 2 | சங்கீதா | சகாயமாதா கோல்பிங்குழு – பவுஞ்சூர் | 15,000.00 |
| 3 | ஜமுனா | செம்பருத்தி கோல்பிங்குழு - இருங்குன்றபள்ளி | 15,000.00 |
| 4 | மனோரஞ்சிதம் | செவ்வந்தி கோல்பிங்குழு - இருங்குன்றபள்ளி | 15,000.00 |
| 5 | முனீஸ்வரி | தாமரை கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 6 | பார்வதி | அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனி பாக்கம் | 15,000.00 |
| 7 | கோமதி | அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனி பாக்கம் | 15,000.00 |
| 8 | சுகந்தி | லூர்துமாதா கோல்பிங்குழு – ஒரகடம் | 20,000.00 |
| 9 | மேரி ரோஸ்லின் | ஜான்போஸ்கோ கோல்பிங்குழு – குப்பையநல்லூர் | 20,000.00 |
| 10 | சௌந்தரி | சூரியகாந்தி கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 20,000.00 |
| 11 | கமலா | அமுதசுரபி கோல்பிங்குழு – மல்லிகாபுரம் | 20,000.00 |
| 12 | ஜெயசீலி | அமுதசுரபி கோல்பிங்குழு – ஆர்.என்.கண்டிகை | 20,000.00 |
| 13 | ரேவதி | சகாயமாதா கோல்பிங் குழு – பவுஞ்சூர் | 15,000.00 |
| 14 | ரதி | சகாயமாதா கோல்பிங் குழு – பவுஞ்சூர் | 15,000.00 |
| 15 | அமுதா | செம்பருத்தி கோல்பிங்குழு - இருங்குன்றபள்ளி | 15,000.00 |
| **மொத்தம்** | | | **2,50,000.00** |

### தனிநபர் கழிவறை கட்டும் திட்டம்: (Individual Toilet programme)



சுற்றுப்புற சுகாதாரத்தை பாதுகாக்கவும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் நலனைக் கருதி கிராம மற்றும் நகரப் பகுதியில் வாழக்கூடிய மக்கள் பயன்பெறும் வகையில் உருவானதுதான் இந்த கழிவறை கட்டும் திட்டமாகும். இக்கடன் தொகையில் ரூ.10,000 மட்டும் கடன்தொகையாகவும், ரூ.5000 மானியமாகவும் வழங்கப்படுகின்றது.

### தனிநபர் கழிவறை கட்டும் திட்டத்தின் வழியாக இவ்வாண்டில் பயன்பெற்றவர்கள் விவரம்:

| வ.எண் | பயனாளி பெயர் | குழு மற்றும் கிராமத்தின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஆரோக்கியமேரி | அன்னை தெரசா கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 2 | சுகந்தி | அன்னை தெரசா கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 3 | ரமணி | சூரியகாந்தி கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 4 | மகேஸ்வரி | சூரியகாந்தி கோல்பிங்குழு – – கரும்பாக்கம் | 15,000.00 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சூசன்னா | தாமரை கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 6 | பிலோமினா | தாமரை கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 7 | கன்னிகா | ரோஜா கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 8 | அஞ்சாலை | ரோஜா கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 9 | சுபாஷினி | டாக்டர்.அப்துல்கலாம் கோல்பிஙகுழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 10 | எப்ஸிபியூலா | டாக்டர்.அப்துல்கலாம் கோல்பிஙகுழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 11 | கண்ணம்மாள் | சாமந்தி கோல்பிங்குழு – கரும்பாக்கம் | 15,000.00 |
| 12 | அஞ்சாலை | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு – ஒரகடம் | 15,000.00 |
| 13 | நீலா | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு – ஒரகடம் | 15,000.00 |
| 14 | தயாள மேரி | குழந்தை தெரசா கோல்பிங்குழு – கடப்பாக்கம் | 15,000.00 |
| 15 | சகாய மேரி | குழந்தை தெரசா கோல்பிங்குழு – கடப்பாக்கம் | 15,000.00 |
| 16 | மார்கிரேட் | ஜான்போஸ்கோ கோல்பிங்குழு – குப்பையநல்லூர் | 15,000.00 |
| 17 | கமலா | சகாயமாதா கோல்பிங்குழு – வடநெம்மேலி | 15,000.00 |
| 18 | சாந்தாமேரி | சகாயமாதா கோல்பிங்குழு – வடநெம்மேலி | 15,000.00 |
| 19 | நீலா | டாக்டர். அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனிப்பாக்கம் | 15,000.00 |
| 20 | பத்மாவதி | டாக்டர். அப்துல்கலாம் கோல்பிங்குழு – கழனிப்பாக்கம் | 15,000.00 |
| **மொத்தம்** | | | **3,00,000.00** |

## குழு சுழல் நிதி தொழிற்கடன் பெற்றவர்கள்:

| வ.எண் | பங்கு | கிராமத்தின் பெயர் | குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | விப்பேடு | விப்பேடு | மாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 2 | குப்பையநல்லூர் | குப்பையநல்லூர் | ஜான்போஸ்கோ குழு | 1,00,000.00 |
| 3 | திருக்கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றம் | சகாயமாதா கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 4 | ஒரகடம் | ஒரகடம் | மாரியம்மன் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 5 | ஒரகடம் | கழனிப்பாக்கம் | டாக்டர்.அப்துல்கலாம் | 1,00,000.00 |
| 6 | கொளப்பாக்கம் | கொளப்பாக்கம் | புனித மிக்கேல் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 7 | திம்மசமுத்திரம் | கன்னடியன்குட்டை | புனித சவேரியார் கோல்பிங் குழு | 1,00,000.00 |
| 8 | கே.கோ புதூர் | கே.கோ புதூர் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | 40,000.00 |
| **மொத்தம்** | | | | **7,40,000.00** |

## கோல்பிங் இணைப்புத்திட்டம்: (Kolping Twinning Project)

கோல்பிங் இணைப்புத்திட்டமானது நம் மறைமாவட்டத்தில் உள்ள 9 கிராமங்களில் பின்தங்கிய இருளர், பட்டியலினத்தவர், சலவைத் தொழிலாளர்கள் போன்ற மக்கள் மத்தியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. திட்ட கிராமங்களில் கோல்பிங் குழுக்கள் அமைத்து சமூக, பொருளாதார, அரசியல் மேம்பாடு அடைய கிராம அளவில் பயிற்சிகள் அளித்தும், கருத்துக்களை பகிர்ந்தும் முன்னேற்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### திட்ட கிராமங்களில் இணைப்புத்திட்டத்தின் வழியாக வழங்கப்பட்ட பயிற்சிகள்:



- கிராம அளவிலான திட்ட அறிமுகம்
- புதிய குழுக்களுக்கான கருத்து பகிர்வு
- சேமிப்பு மற்றும் கடன் மேலாண்மை
- தலைமைத்துவ பயிற்சி
- புத்தக பராமரிப்பு பயிற்சி
- வாழ்க்கை திறன் மேம்பாட்டு பயிற்சி
- சுகாதார பயிற்சி
- தொழில் முனைவோர் பயிற்சி
- கிராம அளவிலான கோல்பிங் கூட்டமைப்பு பயிற்சி
- கிராம வளர்ச்சி குழு பயிற்சி
- தொழில் வாய்ப்புகளை கண்டறிதலுக்கான பயிற்சி
- கிராம மக்கள் பங்களிப்புடன் கூடிய பகுப்பாய்வு செய்தல்
- பஞ்சாயத்து அமைப்பு மற்றும் வலைப்பின்னல் பயிற்சி
- வழக்காடுதல் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு பயிற்சி
- கிராம திட்டமிடல் விளக்கக் கூட்டம்

மேற்கண்ட பயிற்சிகள் அனைத்தும் கோல்பிங் குழு உறுப்பினர்களுக்கு இவ்வாண்டு கொடுக்கப்பட்டுள்ளது.

### கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:

- கிராமங்களில் உள்ள பின்தங்கிய மக்கள் அனைவரும் கோல்பிங் இயக்கத்தின் வழியாக குழுக்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.
- சேமிக்கும் பழக்கம் ஏற்ப்படுத்தப்பட்டு தொடர்ந்து சேமித்து வருகின்றனர்.
- சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்.
- நலிவடைந்த மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளனர்.
- திட்டம் சார்ந்த பயிற்சிகளின் மூலம் தனிநபர், குடும்பம், குழுக்கள், மற்றும் கிராமங்களில் இன்றைய சூழலை அறிந்துக் கொள்கின்றனர்.
- சுகாதாரம், ஆரோக்கியம் பற்றிய தெளிவு பெற்றுள்ளனர்.
- ஆன்மீக வளர்ச்சி மற்றும் புத்தகம் வாசிப்பில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.
- சிறந்த குடிமக்களாக சமூகத்தில் வாழ ஊக்கம் பெற்றுள்ளனர்.

### 3. புதிய கண்ணோட்டம்: (New Thrust)

புதிய கண்ணோட்ட திட்டப்பணியானது திருச்சியில் உள்ள தமிழக சமூக பணிமையம் நிறுவன (TASOSS) வழிகாட்டுதலுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டமானது இலக்கு மக்களிடம் கடந்த 19 அண்டுகளாக 6 கட்டங்களாக பணியாற்றி வருகின்றது. கடந்த 2020 ஆம் ஆண்டில் 6 வது கட்டத்தின் தொடர் செயல்பாடாக தற்போது இத்திட்டமானது கீழ்கண்ட கிராமங்களில் இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

- உத்திரமேரூர் ஒன்றியம் - ஏ.பி.சத்திரம் கிராமம்
- காட்டாங்குளத்தூர் ஒன்றியம் - இருங்குன்றபள்ளி கிராமம்
- வாலாஜாபாத் ஒன்றியம் - சிறுவாக்கம் கிராமம

### மேற்கண்ட திட்ட கிராமங்களில்,

- ஏ.பி.சத்திரம் - 4 மகளிர் குழுக்கள்
  1 குழந்தைகள் பாராளுமன்றம்
- இருங்குன்றபள்ளி - 9 மகளிர் குழுக்கள்
  1 குழந்தைகள் பாராளுமன்றம்
- சிறுவாக்கம் - 4 மகளிர் குழுக்கள்
  1 குழந்தைகள் பாராளுமன்றம்



என்று 20 குழுக்கள் உருவாக்கப்பட்டு புதிய கண்ணோட்ட திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் மக்கள், மகளிர் அமைப்புகளை உள்ளாட்சி அமைப்புகளில் பங்கேற்க செய்தல், வார்டு உறுப்பினர், தலைவர், கவுன்சிலர் போன்ற தேர்தலில் இலக்கு மக்களை போட்டியிட செய்தல், கிராமசபை கூட்டங்களில் பங்கேற்க செய்தல், தங்களின் அடிப்படை வசதிகள், தேவைகள், உரிமைகள் குறித்த பயிற்சியின் மூலம் அறிந்து தங்களின் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 3 கிராமங்களில் உள்ள இயற்கை வளங்களை கண்டறிய மக்கள் பங்கேற்புடன் கூடிய கிராம வரைபடம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கிராம பகுதியில் உள்ள பொது வளங்கள் கண்டறியப்பட்டு அதற்கான விவரங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வழியாக சேகரித்து கிராம சபைக்கு கொண்டுச் சென்று சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றி இயற்கை வளங்கள் மற்றும் பொது வளங்களை மக்கள் பயன்பாட்டில் கொண்டு வருதல் போன்ற செயல்பாடுகள் நடைமுறையில் உள்ளன.



### வாழ்வாதார மேம்பாடு:

- உள்ளாட்சி வளங்களை அடையாளங்கண்டு அவைகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.
- பொருளாதார (ம) வாழ்வாதார மேம்பாட்டிற்கான சிறுதொழில்களை ஊக்குவித்தல்.
- கிராமங்களில் தன்னார்வலர்களை உருவாக்குதல்

போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறன. மேற்கண்ட பயிற்சிகள் மற்றும் வளங்களைக் கொண்டு ஆண்டிற்கு 10 சதவீதம் கிராம மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### குழந்தைகள் பாராளுமன்றம்:



பணித்தளங்களில் கிராம அளவில் உள்ள குழந்தைகளை ஒருங்கிணைத்து குழந்தைகள் பாராளுமன்றம் அமைக்கப் பட்டுள்ளது. பாராளுமன்ற குழந்தைகளுக்கு நாட்டின் அமைப்புமுறை, அரசியல்முறை, உள்ளாட்சி மற்றும் ஊராட்சி அமைப்புகள், நாட்டின் நலன், சேமிப்பு முறை, ஆகியவற்றை அறிந்துக்கொள்ளுதல் போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஒன்றிய மற்றும் மாவட்ட அளவிலான பொறுப்பாளர்களுக்கான தேர்வுகள் முறையாக நடத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.



காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் மேலச்சேரி கிராமத்திலுள்ள மாதேஸ்வரன் (ம) சாந்தகுமாரி ஆகிய இரு குழந்தைகளை "ஒன்பது உரிமைகளும் என்னுடையதே" என்ற அமைப்பின் வழியாக கல்கத்தாவில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் பாராளுமன்ற பயிற்சியில் 10 நாட்கள் தொடர்ந்து பங்கேற்றனர். இதில் இவர்களுக்கு குழந்தைகள் பாராளுமன்றம் குறித்து விளக்கங்கள் அளிக்கப்பட்டது. சி.ஆர்.டி.எஸ் நிறுவன பணியாளர் திருமதி. ஜெயசீலி மற்றும் டாசோஸ் திட்ட அலுவலர் திரு. செல்லப்பாண்டி அவர்களும் பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சியில், குழந்தைகளுக்கான

- சமூக மாற்றம் காணுதல்
- பாதுகாப்பு, வாழ்வு, வளர்ச்சி, பங்கேற்றல்
- குழந்தைகள் அவசரகால உதவி எண்கள்
- சமத்துவம், வாழ்வுரிமை, மாண்புரிமை, சுதந்திர உரிமை
- குழந்தைகளின் பேச்சுரிமை சட்டம், திட்டம், கல்வி உரிமைச் சட்டம்
- குழந்தைகள் பாலியல் வன்கொடுமை சட்டம் பிரிவு 47

ஆகியவற்றை குறித்த விவரங்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

### குழந்தைகள் பாராளுமன்ற மாவட்ட பொறுப்பாளர்கள் விவரம்:

| வ.எண் | கிராமம் | பெயர் | பொறுப்புகள் |
|---|---|---|---|
| 1 | விப்பேடு | செல்வி.ஆர்த்தி | பிரதம மந்திரி |
| 2 | புலியூர் | மாஸ்டர்.சிலம்பு | சபா நாயகர் |
| 3 | சிறுவாக்கம் | செல்வி.கண்மணி | கல்வி அமைச்சர் |
| 4 | சிறுவாக்கம் | செல்வி.டார்த்தி | சுகாதார அமைச்சர் |
| 5 | பெரியவிப்பேடு | செல்வி. பீனா | போக்குவரத்து துறை |
| 6 | மேல்மணப்பாக்கம் | மாஸ்டர்.புகழ்ஜோ | விளையாட்டு துறை |
| 7 | ஆர்.பாளையம் | மாஸ்டர்.அரசு | சட்டம் மற்றும் பாதுகாப்பு |
| 8 | மேலச்சேரி | செல்வி.ஜான்சி | சுற்றுச்சூழல் |
| 9 | விழுதமங்கலம் | செல்வி.ஷர்மிளா | கலை மற்றும் பண்பாட்டுத்துறை |
| 10 | பெரும்பாக்கம் | செல்வி.கலையரசி | பொதுப்பணித்துறை |
| 11 | மேல்மணப்பாக்கம் | செல்வி.சுருதி | பிரதம மந்திரி |

மேற்கண்ட குழந்தைகள் மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்டு பொறுப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

## கிராம அளவில் செயல்படும் குழந்தைகள் பாராளுமன்ற விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழந்தைகள் பாராளுமன்றம் | எண்ணிக்கை | சேமிப்பு தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | கம்மாளம்பூண்டி | 01 | 16 | |
| | | ஆர்.என்.கண்டிகை | 02 | 30 | |
| | | பெருங்கோழி | 02 | 31 | |
| | | மருதம் | 01 | 26 | |
| | | அம்மையப்பநல்லூர் | 01 | 27 | 15,250.00 |
| | | சகாயபுரம் | 01 | 15 | |
| | | விசூர் | 02 | 37 | |
| | | மல்லிகாபுரம் | 02 | 28 | |
| 2 | மதுராந்தகம் | மருதம் | 01 | 15 | |
| | | தச்சூர் | 02 | 38 | 32,500.00 |
| | | கீழ்ப்பட்டு | 01 | 16 | |
| | | மலைப்பாளையம் | 01 | 20 | 6,220.00 |
| | | நெல்வாய் | 01 | 16 | |
| 3 | வாலாஜாபாத் | சிறுவள்ளூர் புதுகாலனி | 03 | 49 | |
| | | தர்மநாயக்கன்பட்டறை | 01 | 15 | 13,600.00 |
| | | சிறுவாக்கம் | 01 | 18 | |
| | | ஏனாத்தூர் | 01 | 16 | |
| 4 | காஞ்சிபுரம் | கன்னடியன்குட்டை | 01 | 20 | |
| | | ஏரிவாக்கம் | 01 | 15 | |
| | | குருவிமலை | 01 | 21 | 21,700.00 |
| | | முத்துவேடு | 02 | 46 | |
| | | பெரும்பாக்கம் | 02 | | |
| | | விப்பேடு | 02 | 35 | |
| | | மேட்டுப்பாளையம் | 01 | 18 | |
| 5 | காட்டாங் கொளத் தூர் | பாலூர் | 01 | 15 | |
| | | திம்மாவரம் | 01 | 14 | 18,200.00 |
| | | மேல்மணப்பாக்கம் | 05 | 65 | |
| | | மேலச்சேரி | 05 | 66 | |
| 6 | சித்தாமூர் | வேட்ரம்பாக்கம் | 01 | 14 | |
| 7 | இலத்தூர் | விழுதமங்கலம் | 02 | 40 | 4,800.00 |
| 8 | அச்சிறுபாக்கம் | நேமம் | 01 | 25 | |
| | | உத்தமநல்லூர் | 01 | 21 | 15,260.00 |
| | | செண்டிவாக்கம் | 02 | 15 | |
| | | எலப்பாக்கம் | 01 | 18 | |
| | | வோலாமூர் | 01 | 16 | |
| | | மொறப்பாக்கம் | 01 | 12 | |
| | | சிறுபேர்பாண்டி | 01 | 18 | |
| | | காட்டுகாரணை | 01 | 12 | |
| 9 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | 02 | 32 | 50,500.00 |
| | | நல்லாத்தூர் | 01 | 18 | 6,200.00 |
| | | ஆயப்பாக்கம் | 01 | 15 | |
| 10 | திருப்போரூர் | சிறுதாவூர் | 01 | 20 | 12,300.00 |
| | | ஒரகடம் | 02 | 40 | |
| | | அந்தோணியார் நகர் | 01 | 18 | |
| **மொத்தம்** | | | **66** | **1062** | **196530.00** |

### 4. நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)



நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ள மகளிர் குழு உறுப்பினர்கள் பொருளாதார மேம்பாடு அடையவும், புதிய தொழிலை தொடங்கவும், செய்யும் தொழிலை விரிவுப்படுத்தவும், நபார்டு உலக வங்கியின் மூலம் கடனுதவி பெற்று சி.ஆர்.டி.எஸ் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் மகளிர் குழுக்களுக்கு கடன்தொகை வழங்குகின்றது. இத்திட்டத்தின் மூலம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் சுயஉதவி குழுக்களின் மூலம் கடன்உதவி பெற்று பயனடைந்து வருகின்றனர்.

**ஒன்றியம் வாரியாக கடன்உதவி பெற்ற மகளிர் குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | குழுக்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 66,90,000.00 |
| 2 | வாலாஜாபாத் | 10 | 61,90,000.00 |
| 3 | காட்டாங்குளத்தூர் | 05 | 26,30,000.00 |
| 4 | திருக்கழுக்குன்றம் | 11 | 65,40,000.00 |
| 5 | திருப்போரூர் | 15 | 93,70,000.00 |
| 6 | மதுராந்தகம் | 09 | 56,40,000.00 |
| 7 | அச்சிறுப்பாக்கம் | 07 | 27,20,000.00 |
| 8 | இலத்தூர் | 06 | 28,60,000.00 |
| 9 | உத்திரமேரூர் | 13 | 60,90,000.00 |
| 10 | சித்தாமூர் | 03 | 11,90,000.00 |
| **மொத்தம்** | | **92** | **4,99,20,000.00** |

### 5. இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் குழு காப்பீட்டு திட்டம்: (Lic – Group Insurance)

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் எல்.ஐ.சி யுடன் இணைந்து ஜனஸ்ரீ பீமயோஜனா என்ற திட்டத்தை கடந்த 16 ஆண்டுகாலமாக மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

தற்போது மத்திய அரசு இத்திட்டத்திற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யாத காராணத்தினால் இத்திட்டம் கடந்த 2017ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. எனவே இத்திட்டத்திற்கு மாற்றுத்திட்டமான குழுகாப்பீட்டு திட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் இணைத்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தில் விபத்தின் காரணமாக இறக்க நேரிட்டாலும் இயற்கை மரணம் அடைந்தாலும் ரூ.20,000 வாரிசுதாரர்களுடைய வங்கிக்கணக்கில் செலுத்தப்படுகின்றது.

**2019 – 2020 ஆண்டுவரை ஒன்றியம் வாரியாக குழுக்காப்பீட்டு திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை:**

| வ.எண் | ஒன்றியம் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திருக்கழுக்குன்றம் | 939 |
| 2 | திருப்போரூர் | 902 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 199 |
| 4 | மதுராந்தகம் | 226 |
| 5 | அச்சிறுப்பாக்கம் | 833 |
| 6 | காஞ்சிபுரம் | 535 |

| | | |
|---|---|---|
| 7 | வாலாஜாபாத் | 527 |
| 8 | இலத்தூர் | 440 |
| 9 | சித்தாமூர் | 98 |
| 10 | கடற்கரை (மாமல்லபுரம் முதல் கடற்கரை வரை) | 442 |
| 11 | கோல்பிங் இந்தியா | 109 |
| 12 | உத்திரமேரூர் | 482 |
| **மொத்தம்** | | **5678** |

2019 – 2020 ஆம் ஆண்டில் இறப்பு இழப்பீட்டுத் தொகை பெற்றவர்கள் விவரம்:

| வ.எண் | இறந்தவர் பெயர் | விலாசம் | வாரிசுதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | ரூபன் | தச்சூர் - மதுராந்தகம் | சகாயமேரி | 20,000.00 |
| 2 | மேகாவன் | மெய்யூர்குப்பம், கல்பாக்கம், திருக்கழுக்குன்றம் | வளர்மதி | 20,000.00 |
| 3 | தாந்தோணி | சூரி பிள்ளையார்குப்பம், செய்யூர் | மல்லிகா | 20,000.00 |
| 4 | லில்லி | உதயம்பாக்கம், திருக்கழுக்குன்றம் | ஜெயக்குமார் | 20,000.00 |
| 5 | செல்வம் | பெருங்கோழி, உத்திரமேரூர் | லூர்துமேரி | 20,000.00 |
| 6 | விநாயகம் | சீவாடி, செய்யூர் | சிவகாமி | 20,000.00 |
| 7 | செந்தில்குமார் | காட்டுக்கரணை, அச்சிறுப்பாக்கம் | ராஜேஷ்வரி | 20,000.00 |
| 8 | செல்வகுமார் | சிறுதாவூர், திருப்போரூர் | தனலட்சுமி | 20,000.00 |
| 9 | கமில் | சட்ராஸ் மாதாகோவில், கல்பாக்கம் | லட்சுமி | 20,000.00 |
| 10 | குட்டியப்பன் | ஆயப்பாக்கம், திருக்கழுக்குன்றம் | சின்னப்பொன்னு | 20,000.00 |
| 11 | ஜோதி | ஆயப்பாக்கம், திருக்கழுக்குன்றம் | சீனிவாசன் | 20,000.00 |
| 12 | தினகரன் | சீவாடி, செய்யூர் | சரளா | 20,000.00 |
| 13 | வீரராகவன் | வாரணவாசி,வாலாஜாபாத் | பத்மா | 20,000.00 |
| 14 | வாசுதேவன் | பள்ளமங்களம், திருக்கழுக்குன்றம் | லில்லி | 20,000.00 |
| 15 | மாரியம்மாள் | பெரியவிப்பேடு, திருப்போரூர் | முருகன் | 20,000.00 |
| 16 | நீலா | காரணை, திருப்போரூர் | சேகர் | 20,000.00 |
| 17 | வேதாச்சலம் | சிறுதாவூர், திருப்போரூர் | கோவிந்தம்மாள் | 20,000.00 |
| 18 | முருகன் | வேலாமூர், அச்சிறுப்பாக்கம் | குமாரி | 20,000.00 |
| 19 | பிரியா | சீவாடி, செய்யூர் | பால்ராஜ் | 20,000.00 |
| 20 | சுப்பிரமணி | பள்ளத்தெரு, திருக்கழுக்குன்றம் | சரஸ்வதி | 20,000.00 |
| 21 | மேனகா | கடும்பாடி, திருக்கழுக்குன்றம் | பூமிநாதன் | 20,000.00 |
| 22 | பச்சமுத்து | புலியூர்,உத்திரமேரூர் | கீதா | 20,000.00 |
| 23 | சாரதா | ஒரகடம், திருக்கழுக்குன்றம் | யுவராஜ் | 20,000.00 |
| 24 | சுரேஷ் | தழுதாளிகுப்பம், செய்யூர் | பிரபா | 20,000.00 |
| 25 | அந்தோணிசாமி | முத்துவேடு,காஞ்சிபுரம் | மரியா | 20,000.00 |
| 26 | விஸ்வநாதன் | புதுப்பபட்டடினம் குப்பம் | தேவகி | 20,000.00 |
| **மொத்தம்** | | | | **5,20,000.00** |

மேற்கண்ட வாரிசுதாரர்களுக்கு குழு காப்பீடு திட்டத்தின் மூலம் இறப்பு இழப்பீட்டு தொகை அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

## 6.சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்: (Community Based Rehabilitation)



சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டமானது மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்கான திட்டமாகும். சமுதாயத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளை அடையாளம் கண்டு ஒரு தனிமனிதனுக்கு இச்சமூகத்தில் கிடைக்கப்பெறும் உரிமைகள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்தல் மற்றும் சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகளையும் ஒரு அங்கத்தினராக இணைத்து சம உரிமையுடன் வாழ்ந்திட வழிவகை செய்யும் திட்டமாக சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் அமைந்துள்ளது.

இத்திட்டமானது வாலாஜாபாத் மற்றும் திருப்போரூர் ஆகிய 2 ஒன்றியங்களில் கடந்த 2019 ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகின்றது. வாலாஜாபாத் ஒன்றியத்தில் 6 பஞ்சாயத்துகளில் உள்ள 45 கிராமங்களிலும், திருப்போரூர் ஒன்றியத்தில் 12 பஞ்சாயத்துகளில் உள்ள 40 கிராமங்களிலும் மொத்தம் 936 மாற்றுத்திறனாளிகளை இனம்கண்டு அவர்களின் மறுவாழ்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு திட்ட கிராமங்களில் இதுவரை கண்டறியப்பட்ட 21 வகையான மாற்றுத்திறனாளிகளின் விவரம் பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- கை, கால்கள் ஊனமுற்றோர் - 434 நபர்கள்
- தொழுநோய் பாதிப்பிலிருந்து குணமடைந்தவர்கள் - 07 நபர்கள்
- மூளை முடக்குவாதம் - 23 நபர்கள்
- குள்ளவாதம் - 13 நபர்கள்
- தசைச்சிதைவு நோய் - 08 நபர்கள்
- அமிலவீச்சினால் ஏற்படும் ஊனம் - 01 நபர்கள்
- கண்பார்வையற்றவர் - 22 நபர்கள்
- கண்பார்வை குறைபாடு - 26 நபர்கள்
- காது கேளாதவர் - 82 நபர்கள்
- செவித்திறன் குறைபாடு - 68 நபர்கள்
- பேச்சு மற்றும் மொழி சிரமம் - 31 நபர்கள்
- மனவளர்ச்சி குறைபாடு - 140 நபர்கள்
- குறிப்பிட்ட கற்றல் குறைபாடு - 04 நபர்கள்
- புற உலக சிந்தனை அற்ற குறைபாடு - 04 நபர்கள்
- மனச்சிதைவு - 11 நபர்கள்
- தண்டுவட மரப்பு நோய் - 00
- நடுக்குவாதம் - 03 நபர்கள்
- இரத்தம் உறையாமை - 00
- இரத்த அழிவு நோய் - 00
- குருதி சோகை - 00
- பலவகை ஊனம் - 32 நபர்கள்

மொத்தம் 936 நபர்கள்

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் 1 திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் 4 களப்பணியாளர்கள் என இரண்டு ஒன்றியத்திலும் 2 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 8 களப்பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கான திட்டம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு கடந்த ஓராண்டில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரம்:

## ADD இந்தியா நிறுவனத்தின் பயிற்சிகள்:



ADD இந்தியா நிறுவனத்தின் மூலம் திரு. முரளிதரன் அவர்கள் மாற்றுத்திறனாளிகளை இனம் கண்டறிதல், மாற்றுத்திறனாளிகளின் இன்றைய சமுதாய நிலை, மாற்றுத்திறனாளிகளின் தடைகள், தடைகளை தகர்க்கும் வழிமுறைகள் போன்றவற்றை முதல்கட்ட பயிற்சியிலும், மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காண்பதில் உள்ள சிக்கல்கள், எதிர்கொள்ளும் சவால்கள், கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் தேவைகள், தேவைகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் குறித்து, இரண்டாம் கட்ட பயிற்சியிலும் மிகத்தெளிவாக விளக்கப்பட்டது. தொடர்ந்து திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சியில் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்ட செயல்பாடுகள் குறித்த திட்டமிடுதல், கண்காணித்தல், செயல்படுத்துதல், மதிப்பிடுதல் குறித்தும், ஒருங்கிணைப்பாளர்களுக்கான கடமைகள், பொறுப்புகள், மாற்றுத்திறனாளிகளுக்கான சங்கங்கள் அமைத்தல் குறித்தும் பயிற்சியளிக்கப்பட்டது.



மாற்றுத்திறனாளிகளுக்கான சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் குறிக்கோள், சூழ்நிலை பகுப்பாய்வு செய்தல், திட்டத்தின் குறிக்கோளை நோக்கிய திட்டமிடுதல் மற்றும் அறிக்கை தயாரித்தல் பற்றிய பயிற்சியானது நிறுவன இயக்குநர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான 3 நாள் பயிற்சியானது பெங்களூரில் உள்ள KROSS அலுவலகத்தில் நடத்தப்பட்டது.

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தில் பின்வரும் 5 கருப் பொருட்களின் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவையாவன:

- சுகாதாரம்
- கல்வி
- வாழ்வாதாரம்
- சமூகம்
- மேம்பாடு



### சுகாதாரம்:

மாற்றுத்திறனாளிகள் உடலில் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளின் மூலம் குறைபாடுகளை களைவது, உதவி உபகரணங்கள் மூலம் அவர்களே அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுதல் போன்ற உயரிய நோக்கில் மாற்றுத்திறனாளிகளையும் சமுதாயத்தின் அங்கத்தினராக மாற்றும்பொருட்டு மாற்றுத்திறனாளிகளின் மருத்துவ உதவிகளுக்காக காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (NIEPMED), மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மனநல மருத்துவமனை (THE BANYAN), அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடிகள் ஆகியவை பார்வையிடப்பட்டு மாற்றுத்திறனாளிகளின் மருத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ உதவி உபகரணங்கள் பெறுதல், மாற்றுத்திறனாளி குழந்தைகள் ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டு அவர்களுக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் அவர்களுக்கான உடல் உறுப்புகள் சார்ந்த குறைபாடுகள் சரிசெய்யப்படுகின்றன. அவ்வாறு

இதுவரை 18 மாற்றுத்திறனாளி குழந்தைகள் கண்டறியப்பட்டு தொடர்ந்து சிகிச்சை அளித்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மேற்கண்ட செயல்பாடுகளின் கீழ் திருப்போரூர் மற்றும் வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள 22 மாற்றுத்திறனாளிகள் உதவி உபகரணங்களுக்காக பதிவு செய்யப்பட்டு 8 மாற்றுத்திறனாளிகள் உதவி உபகரணங்கள் பெற்று பயனடைந்துள்ளனர். அவற்றின் விவரம் பின்வருமாறு:

காதொலி கருவி - 5

சக்கர நாற்காலி - 1

மூன்று சக்கரவாகனம் - 2

தொடர்ந்து வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள 5 வயதுக்குட்பட்ட 1 குழந்தைக்கு உதடுபிளவு அறுவைசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

### மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை (ம) தேசிய அடையாள அட்டை: (UDID)

மாற்றுத்திறனாளிகள் அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்காக மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்துச்செல்லப்பட்டு பரிசோதனைக்குப்பின் மருத்துவரால் சான்றளிக்கப்பட்டு அடையாள அட்டை பெறப்படுகிறது. இச்சான்றுகளின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் மூலம்

- 67 மாற்றுத்திறனாளிகள் அரசு மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு மருத்துவ சான்றிதழ் பெற்றுள்ளனர்.
- 40 மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பெற்றுள்ளனர்.
- 10 மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை பெற்றுள்ளனர்.

### கல்வி:



கல்வி என்பது அனைத்து குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. மாற்றுத்திறனாளி குழந்தைகள் சமுதாயத்தில் சம உரிமையுடன், தன்னம்பிக்கையுடன், எதிர்காலத்தில் மற்றவரின் உதவியின்றி வாழவும், சமுதாயத்தில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளவும் இக்கல்வியின் மூலம் மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கை நிலையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் சார்ந்த 85 கிராமங்களிலும் உள்ள அரசு பள்ளிகளில் இத்திட்டத்தை விளக்கி மாற்றுத்திறனாளி குழந்தைகளும் ஒருங்கிணைந்த கல்வி பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் கல்விகற்கும் மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கல்வி உதவித்தொகைக்காக 5 விண்ணப்பங்கள் அரசு அலுவலகங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தீவிர மனவளர்ச்சி குறைபாடுடைய குழந்தைகளுக்கும், அவர்களை பராமரித்து வரும் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கும் அன்றாட வாழ்க்கைத்திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### வாழ்வாதாரம்:

மாற்றுத்திறனாளிகளும் சமுதாயத்தில் சுயமாக தொழில்செய்து தங்களுடைய வருமானத்தை பெருக்கிக்கொள்ளும்வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரக்கூடிய வளங்களை கண்டறிந்து சுயதொழில் செய்து வருமானத்தை ஈட்டுதல், வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

என்னும் நோக்கில் அரசு துறைகளின் மூலம் கிடைக்கக்கூடிய திட்டங்களில் மாற்றுத்திறனாளிகளை இணைத்து பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி கீழ்கண்ட திட்டங்களில் மாற்றுத்திறனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.



- மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர அரசு உதவித்தொகையை பெறச்செய்தல்
- மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் மாற்றுத்திறளானிகளை இணைத்தல்.
- மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர்களுக்கான பராமரிப்பு உதவித்தொகை பெற்றுத் தருதல்.
- மாற்றுத்திறனாளிகள் இடஒதுக்கீட்டின்படி அரசின் அனைத்து துறைகளிலும் அரசுத் திட்டங்களை பெற்று தருதல்.
- சுயதொழில் செய்வதற்காக மாற்றுத்திறனாளிகளுக்கு வங்கிக்கடன் பெற்று தருதல்.
- திறன்வளர்ப்பு பயிற்சி அளித்தல்

**மேற்கண்ட திட்டங்களின் மூலம் கடந்த ஓராண்டில் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

- அரசின் மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் - 33
- அரசின் மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெற்றவர்கள் - 14
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் விண்ணப்பித்தவர்கள் - 76
- பராமரிப்பு உதவித்தொகைக்கு விண்ணப்பித்தவர்கள் - 03
- கழிவறை கட்டும் திட்டத்தில் விண்ணப்பித்தவர்கள் - 26
- கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் சுயதொழிலுக்காக விண்ணப்பித்தவர்கள் - 02

### சமூகம்:



மாற்றுத்திறனாளிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தில் உள்ள பங்குதாரர்களுக்கான நல்உறவை பலப்படுத்தி மாற்றுத்திறனாளிகளையும் சமூகத்தின் முக்கிய அங்கத்தினர்களாக சமூக உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ள செய்து சமூக நிகழ்வுகளில் மாற்றுத்திறனாளிகளையும் பங்கேற்க செய்தல் போன்ற விழிப்புணர்வு கருத்தரங்கம் இரண்டு ஒன்றியங்களில் உள்ள அனைத்து திட்ட கிராமங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளது. அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2019 டிசம்பர் 03 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவன வளாகத்தில் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு பயனுள்ள வகையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்துக்கொண்டு அவ்விழாவினை சிறப்பித்தனர்.



### மேம்பாடு:

இச்சமூகத்திற்கு மாற்றுத்திறனாளிகளை அடையாளம் காட்டுதல், அவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள வழிவகைகளை ஏற்படுத்தி கொடுத்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்களை பெற்று தருதல் மற்றும் அவர்களின் பொதுத்தேவைகளை அவர்களாகவே நிவர்த்தி செய்து கொள்ளுதல் எனும் குறிக்கோளின் அடிப்படையில்

மாற்றுத்திறனாளிகள் அனைவரும் குழுக்களாக ஒருங்கிணைக்கப்பட்டு குழுக்களாக செயல்பட்டு வருகின்றனர். கடந்த ஓராண்டில் உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் குழுக்களின் எண்ணிக்கை மொத்தம் 20.

| வ.எண் | கிராமம் | குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பையனூர் | டாக்டர்.அம்பேத்கர் மாற்றுத்திறனாளிகள் குழு | 10 |
| 2 | தண்டலம் | மறுமலர்ச்சி மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 3 | அச்சரவாக்கம், செம்பாக்கம் | அழகுநிலா மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 4 | செம்பாக்கம் | மல்லிகை மாற்றுத்திறனாளிகள் குழு | 5 |
| 5 | திருப்போரூர் | டாக்டர்.அம்பேத்கர் மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 6 | திருப்போரூர் | இனியவை மாற்றுத்திறனாளிகள் குழு | 7 |
| 7 | எம்.ஜி.ஆர் நகர் | விடியல் மாற்றுத்திறனாளிகள் குழு | 7 |
| 8 | ஒரகடம் | வசந்தம் மாற்றுத்திறனாளிகள் குழு | 9 |
| 9 | வளவந்தாங்கல் | ரோஜா மாற்றுத்திறனாளிகள் குழு | 13 |
| 10 | சிறுவள்ளூர் | வெற்றி மாற்றுத்திறனாளிகள் குழு | 7 |
| 11 | மேட்டுக்காலனி | முன்னேற்றம் மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 12 | உள்ளாவூர் | சுடரொலி மாற்றுத்திறனாளிகள் குழு | 10 |
| 13 | வையாவூர் | கோமாத்தம்மன் மாற்றுத்திறனாளிகள் குழு | 18 |
| 14 | எம்.ஜி.ஆர் நகர் | எல்லையம்மன் மாற்றுத்திறனாளிகள் குழு | 16 |
| 15 | பாரதி நகர் | பனிமலர் மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 16 | நல்லூர் | தாமரை மாற்றுத்திறனாளிகள் குழு | 5 |
| 17 | கட்டவாக்கம் | கட்டவாக்கம் மாற்றுத்திறனாளிகள் குழு | 8 |
| 18 | தொள்ளாழி | முல்லை மாற்றுத்திறனாளிகள் குழு | 6 |
| 19 | ஆம்பாக்கம் | யோகம் மாற்றுத்திறனாளிகள் குழு | 4 |
| 20 | வேண்பாக்கம் | ரோஜா மாற்றுத்திறனாளிகள் குழு | 6 |

## 7.காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் - புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டம்: (Cancer Awarness Programme)



உலகில் ஏற்படும் உயிரிழப்புகளில் ஆறில் ஒன்றுக்கு காரணம் புற்றுநோய் என்று கூறுகிறது உலக சுகாதார நிறுவனம். 10 இந்தியர்களில் ஒருவருக்கு புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் தற்போது இந்தியாவில் அதிகரித்து வரும் நோய்களில் புற்றுநோய் முக்கிய காரணியாக உள்ளது என்றும் உலக சுகாதார அமைப்பு சமீபத்தில் ஒரு கருத்து தெரிவித்துள்ளது. புகை பிடித்தல், மது அருந்துதல், போதை பொருட்களை பயன்படுத்துதல், அதிக கொழுப்பு நிறைந்த உணவுகளை உண்பது, உடற்பயிற்சி இன்மை போன்ற இன்றைய காலத்தில் மாறி வரும் பழக்கவழக்கங்கள் காரணமாக தற்போது புற்றுநோயின் தாக்கம் மிக அதிகமாக உள்ளது.

ஏனெனில் உலக சுகாதார அமைப்பின் அறிக்கையின்படி 2018 ம் ஆண்டில் இந்தியாவில் மொத்தம் 135 கோடி மக்களில் 11,60,000 பேர் புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள். 22,06,000 பேருக்கு கடந்த 5 ஆண்டுகளில் புற்றுநோய் பரவி உள்ளது. அத்துடன் 15 இந்தியர்களில் ஒருவர் புற்றுநோயால் உயிரிழப்பார் என்றும் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் மார்பக புற்றுநோய்க்கு 1,62,500 பேரும், வாய்வழி புற்றுநோய்க்கு 1,20,000 பேரும், கர்பப்பை வாய்ப்புற்று நோய்க்கு 97,000 பேரும், நுரையீரல் புற்றுநோய்க்கு 68,000 பேரும், வயிற்று புற்றுநோய்க்கு 57,000 பேரும், பெருங்குடல் புற்றுநோய்க்கு 57,000 பேரும் இந்நோய்க்கு பலியாகி இருக்கின்றனர்.

இந்த சூழலில் புற்றுநோய் வராமல் தடுப்பதே மிகவும் அவசியமாகவும், புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தவும், புற்றுநோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைக்கவுமே காரிதாஸ் இந்தியாவால் துவங்கப்பட்டது இந்த எழுவோம் இயக்கம் எனும் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டமாகும்.

எழுவோம் இயக்கம் திட்டத்தின் மூலம் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சார திட்டத்திற்கு காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 7 ஒன்றியங்களில் உள்ள 18 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒன்றியம் | கிராமங்கள் |
|---|---|---|
| 1 | காட்டாங்கொளத்தூர் | இருங்குன்றபள்ளி |
| | | மேல்மணப்பாக்கம் |
| 2 | திருக்கழுக்குன்றம் | மாதா கோவில் |
| | | கொக்கிலமேடு குப்பம் |
| | | புலியூர் |
| | | எடையூர் |
| 3 | இலத்தூர் | உடல்காரகுப்பம் |
| | | குமாரகுப்பம் |
| 4 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் |
| | | விசூர் |
| | | மல்லிகாபுரம் |
| | | கருவேப்பம்பூண்டி |
| 5 | அச்சிறுப்பாக்கம் | நேமம் |
| | | உத்தமநல்லூர் |
| 6 | மதுராந்தகம் | கே.கே புதூர் |
| | | மலைப்பாளையம் |
| 7 | திருப்போரூர் | சிறுதாவூர் |
| | | ஒரகடம் |

**எழுவோம் இயக்கம் - புற்றுநோய் ஒழித்தல் பிரச்சார துவக்க விழா:**



செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் அகில உலக புற்றுநோய் தினம் மற்றும் எழுவோம் இயக்கத்தின் புற்றுநோய்க்கு எதிரான பிரச்சார துவக்க விழா 03.02.2020 அன்று புனித பவுல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் டாக்டர்.அ.நீதிநாதன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்கை

மருத்துவக்கல்லூரி முதல்வர் டாக்டர். பாலாஜி அவர்கள் கலந்துக்கொண்டு புற்றுநோய் குறித்து விளக்கமளித்தார். தொடர்ந்து காரிதாஸ் இந்தியாவின் மண்டல மேலாளர் டாக்டர்.ஜான் ஆரோக்கியராஜ் அவர்கள் புற்றுநோயின் வகைகள், காரணங்கள், குறித்து சிறப்புரை ஆற்றினார். 500 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்துக்கொண்ட இந்நிகழ்வில் புனித பவுல் மெட்ரிக் பள்ளியின் தாளாளர் அருட்பணி. பாக்கிய ரெஜிஸ், மருத்துவர். தாகீரா (எஸ்.ஆர்.எம் மருத்துவக்கல்லூரி), சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி. இ.அந்தோணிராஜ் மற்றும் பணியாளர்கள் என அனைவரும் கலந்துக்கொண்டு புற்றுநோய்க்கு எதிரான பிரச்சாரத்தை துவக்கி வைத்தனர்.



### நோயாளிகளை அடையாளம் காணுதல்:

புற்றுநோய் ஒழிப்பு பிரச்சாரத் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல் நமது நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | மாவட்டம் | ஒன்றியம் | கிராமம் | நோயாளிகளின் எண்ணிக்கை | பாலினம் | | மருத்துவம் பெறுவோர் | மருத்துவம் பெறாதவர் | அறுவை சிகிச்சை செய்தவர் | அறுவை சிகிச்சை செய்யாதவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஆ | பெ | | | | |
| 1 | செங்கல்பட்டு | 06 | 14 | 25 | 07 | 18 | 23 | 02 | 16 | 09 |
| 2 | காஞ்சிபுரம் | 01 | 04 | 03 | 01 | 02 | 03 | 00 | 02 | 01 |
| மொத்தம் | 02 | 07 | 18 | 28 | 08 | 20 | 26 | 02 | 18 | 10 |

### தன்னார்வலர்களுக்கான பயிற்சிகள்:

புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு திட்ட கிராமங்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ பரிசோதனை காலங்களில் புற்றுநோய் விழிப்புணர்வு பயிற்சிகள், நோயாளிகளை ஒருங்கிணைத்தலுக்கான பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட திட்ட கிராமங்களில் உள்ள 20 தன்னார்வலர்களுக்கு நம் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

### பள்ளிக் குழந்தைகளுக்கான விழிப்புணர்வு:

கீழ்கண்ட 3 ஒன்றியங்களில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு புற்றுநோய் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கம் நடத்தப்பட்டு புற்றுநோய் குறித்த தெளிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | பள்ளி |
|---|---|---|---|
| 1 | அச்சிறுப்பாக்கம் | நேமம் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி - அச்சிறுப்பாக்கம் |
| 2 | காட்டாங்கொளத்தூர் | இருங்குன்றபள்ளி | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி - இருங்குன்றபள்ளி |
| | | மேல்மணப்பாக்கம் | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி - மேல்மணப்பாக்கம் |
| 3 | இலத்தூர் | செங்காட்டூர் | ஆர்.சி.நடுநிலைப்பள்ளி – செங்காட்டூர் |

பள்ளி குழந்தைகளுக்கான புற்றுநோய் விழிப்புணர்வு பயிற்சியில் கடைகளில் பாக்கெட்டுகளில் அடைத்து விற்பனை செய்யப்படும் திண்பண்டங்களை உண்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், பெற்றோர்கள்

பயன்படுத்தும் புகையிலை, பாக்கு, பீடி, சிகரெட் போன்ற போதை பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் வாய்புற்றுநோய், குடல்புற்றுநோய், தாள்புற்றுநோய், இரத்தபுற்றுநோய் போன்ற பலவகையான புற்றுநோயால் ஏற்படும் அபாயம் குறித்தும், புற்றுநோயை உருவாக்கும் பொருட்களை பயன்படுத்தாமல் உடலை பாதுகாத்துக்கொள்வது குறித்தும் பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

### 8. பெண்கள் கூட்டமைப்பு: (Women Federation)

தமிழக சமூகபணி மையம் (Tasoss) வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டமைப்பாக செயல்பட்டு வருகின்றனர். 7961 உறுப்பினர்களைக் கொண்டு செங்கல்பட்டு கிராமப்புற பெண்கள் முன்னேற்ற இயக்கம் என்ற பெயரில் பெண்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து பொது செயல்பாடுகள் மற்றும் பெண்கள் உரிமை சார்ந்த பணிகளில் ஈடுபட்டு தீர்வு காண்கின்றனர்.




தொடர்ந்து இந்த ஆண்டிற்கான அகில உலக பெண்கள் உரிமை தினம் 07.03.2020 அன்று புனித பவுல் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் "சமத்துவத்தை நோக்கி" என்ற தலைப்பில் செங்கல்பட்டு மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு.அ.நீதிநாதன் அவர்கள் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளர்களான திருமதி.ஷர்மிளா ஜான் லூயிஸ் (வழக்கறிஞர்,சென்னை உயர்நீதிமன்றம்) பேரருட்பணி. ஞா.பாக்கிய ரெஜிஸ் (ஆயரின் பொதுபதில்குரு, செங்கை மறைமாவட்டம்) திருமதி.தாகிரா (எஸ்.ஆர்.எம் மருத்துவக்கல்லூரி) முனைவர்.ஜான் ஆரோக்கியராஜ் (காரிதாஸ் இந்தியா மண்டல மேலாளர்) அருட்பணி. மரியசூசை (கோல்பிங் இந்தியா) திரு.செல்லபாண்டி (டாசோஸ் மண்டல மேலாளர்) திரு.பாலா (திரைப்பட பின்னனி பாடகர்) ஆகியோர்கள் கலந்துக்கொண்டு பெண்களுக்கான சமத்துவத்தை நோக்கி என்கிற தலைப்பில் தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டார்கள்.





ஒன்றியம் வாரியாக சிறப்பாக செயல்பட்ட மகளிர் குழுக்களை பாராட்டி சாதனை தலைவர்களின் பெயரில் நினைவுப்பரிசுகளும் வழங்கப்பட்டன. இவ்விழாவிற்கு 5000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

### மகளிர் குழுக்கள் மற்றும் பெண்கள் முன்னேற்றம்:

1999ஆம் ஆண்டுமுதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் உதவியுடன் (TASOSS) மகளிர் திட்டத்துடன் இணைந்து மகளிர் குழுக்கள் அமைத்து குழுக்களுக்கு திறன்வளர்ப்பு, தலைமைப்பண்பு, நிதிநிர்வாகம் என பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகின்றோம். மேலும் மகளிர் குழுக்கள் மாதாந்திரக்கூட்டம் நடத்துதல், சேமிப்பு மற்றும் கடன் வரவு, செலவு கணக்கு பேரேடுகளை பராமரித்தலுக்கும் முறையாக வழிகாட்டப்படுகிறது. வங்கிகள் வழியாக நேரடிக்கடன், சுழல்நிதி, பொருளாதாரக்கடன் பெற்று சமூகத்தில் மகளிர் குழுக்கள் மேம்பாடு அடைவதற்கு சி.ஆர்.டி.எஸ் பெருமளவு உதவுகின்றது. தற்போது சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து சிறப்பாக இயங்கிவரும் குழுக்களின் விவரம் ஒன்றியம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழு எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை | சேமிப்புத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 12 | 15 | 57 | 744 | 88,25,000 |
| 2 | வாலாஜாபாத் | 7 | 18 | 58 | 784 | 84,90,000 |
| 3 | உத்திரமேரூர் | 16 | 27 | 80 | 1037 | 1,20,10,000 |
| 4 | மதுராந்தகம் | 5 | 7 | 29 | 455 | 64,60,000 |
| 5 | அச்சிறுப்பாக்கம் | 15 | 20 | 60 | 941 | 2,35,25,000 |
| 6 | சித்தாமூர் | 8 | 8 | 13 | 190 | 22,80,000 |
| 7 | லத்தூர் | 9 | 11 | 55 | 672 | 73,92,000 |
| 8 | திருப்போரூர் | 10 | 13 | 50 | 665 | 1,95,60,000 |
| 9 | காட்டாங்கொளத்தூர் | 7 | 12 | 65 | 822 | 84,20,000 |
| 10 | திருக்கழுக்குன்றம் | 14 | 19 | 84 | 1203 | 1,63,55,650 |
| 11 | கடற்கரை | 7 | 10 | 32 | 448 | 66,35,000 |
| **மொத்தம்** | | **110** | **160** | **583** | **7961** | **11,99,52,650** |

**புதிய குழுக்கள் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழு எண்ணிக்கை | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | உத்திரமேரூர் | பேரூராட்சி | நல்லூர் | 5 | 70 |
| 2 | உத்திரமேரூர் | பெருங்கோழி | பெருங்கோழி | 1 | 12 |
| 3 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் நகராட்சி | நங்கையர்குளம் | 1 | 12 |
| 4 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | மேல்மணப்பாக்கம் | 2 | 24 |
| 5 | காட்டாங்கொளத்தூர் | ஆலப்பாக்கம் | இளுங்குன்றபள்ளி | 3 | 38 |
| 6 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | கேளம்பாக்கம் | 2 | 24 |
| 7 | திருப்போரூர் | கூத்தவாக்கம் | அந்தோணியார் நகர் | 1 | 12 |
| 8 | திருப்போரூர் | ஒரகடம் | ஒரகடம் | 1 | 12 |
| 9 | திருப்போரூர் | சிறுதாவூர் | சிறுதாவூர் | 1 | 12 |
| 10 | லத்தூர் | நெடுமரம் | நெடுமரம் | 2 | 24 |
| 11 | கடற்கரை பகுதி | மாமல்லபுரம் பேரூராட்சி | வெண்புருஷம் குப்பம் | 1 | 12 |
| | கடற்கரை பகுதி | கடலூர் | கடலூர் பெரியகுப்பம் | 1 | 14 |
| **மொத்தம்** | | | **12 கிராமம்** | **21** | **266** |

**நேரடிக்கடன்பெற்ற குழுக்களின் விவரம்:**

| வ.எண் | ஒன்றியம் | கிராமம் | உறுப்பினர் | குழுவின் பெயர் | கடன் தொகை | வங்கி விவரம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மதுராந்தகம் | மலைப்பாளையம் | 20 | வெற்றி ரோஜா | 5,00,000.00 | SBI -கருங்குழி |
| 2 | மதுராந்தகம் | கே.கே.புதூர் | 12 | அம்பேத்கார் | 4,98,000.00 | SBI -கருங்குழி |
| 3 | சித்தாமூர் | தண்டலம் | 14 | பொன்னியம்மன் | 5,80,000.00 | கனரா வங்கி தண்டலம் |
| 4 | சித்தாமூர் | தேன்பாக்கம் | 13 | பெண்கள் மேம்பாட்டு சங்கம் | 5,00,000.00 | இந்தியன் வங்கி கடப்பாக்கம் |
| 5 | காஞ்சிபுரம் | குருவிமலை | 12 | கலைவாணி | 5,00,000.00 | காஞ்சி கூட்டுறவு வங்கி |
| 6 | காஞ்சிபுரம் | குருவிமலை | 15 | முத்துலட்சுமி அம்மை | 7,00,000.00 | காஞ்சி கூட்டுறவு வங்கி |
| 7 | காஞ்சிபுரம் | குருவிமலை | 12 | அன்னை இந்திராகாந்தி | 6,00,000.00 | காஞ்சி கூட்டுறவு வங்கி |
| 8 | காஞ்சிபுரம் | விப்பேடு | 14 | விண்மீன்கள் | 5,00,000.00 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி – விப்பேடு |
| 9 | காஞ்சிபுரம் | விப்பேடு | 15 | இமயம் | 1,00,000.00 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி - விப்பேடு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | 13 | சி.ஆர்.டி.எஸ் கலசம் | 1,00,000.00 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி – கீழ் அம்பி |
| 11 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | 12 | யோகம் | 1,00,000.00 | கனரா வங்கி – காஞ்சிபுரம் |
| 12 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | 12 | கோபுரம் | 1,00,000.00 | கனரா வங்கி- காஞ்சிபுரம் |
| 13 | காஞ்சிபுரம் | மேட்டுப்பாளையம் | 12 | கிரன்பேடி | 5,00,000.00 | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி |
| 14 | காஞ்சிபுரம் | முத்துவேடு | 15 | தாமரை | 5,00,000.00 | இந்தியன் வங்கி – திருப்புக்குழி |
| 15 | காஞ்சிபுரம் | முத்துவேடு | 17 | செந்தாமரை | 4,50,000.00 | இந்தியன் வங்கி – திருப்புக்குழி |
| 16 | அச்சிறுப்பாக்கம் | மாத்தூர் | 13 | செவ்வந்தி | 3,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 17 | அச்சிறுப்பாக்கம் | மாத்தூர் | 13 | ரோஜா | 5,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 18 | அச்சிறுப்பாக்கம் | முனியந்தாங்கள் | 16 | முல்லை | 5,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 19 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரனை | 14 | தாழம்பூ | 3,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 20 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரனை | 12 | சி.ஆர்.டி.எஸ் | 2,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 21 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரனை | 15 | சாமந்தி | 5,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 22 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரனை | 12 | தாழம்பூ2 | 6,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 23 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரனை | 12 | முனீஸ்வரர் | 5,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 24 | அச்சிறுப்பாக்கம் | எலப்பாக்கம் | 19 | மல்லிகை | 2,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 25 | அச்சிறுப்பாக்கம் | எலப்பாக்கம் | 17 | ஞானஒளி | 2,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 26 | அச்சிறுப்பாக்கம் | எலப்பாக்கம் | 19 | அன்னை தெரசா | 3,00,000.00 | இந்தியன் வங்கி – ராமாபுரம் |
| 27 | வாலாஜாபாத் | கௌரியம்மன்பேட்டை | 15 | ஓம்சரவணா | 7,00,000.00 | இந்தியன் வங்கி – ஏனாத்தூர் |
| 28 | வாலாஜாபாத் | கௌரியம்மன்பேட்டை | 12 | காவியம் | 7,00,000.00 | இந்தியன் வங்கி – ஏனாத்தூர் |
| 29 | வாலாஜாபாத் | கௌரியம்மன்பேட்டை | 13 | ஸ்ரீராம் | 7,00,000.00 | இந்தியன் வங்கி ஏனாத்தூர் |
| 30 | வாலாஜாபாத் | ஏனாத்தூர் | 15 | அன்னை தெரசா | 7,00,000.00 | இந்தியன் வங்கி ஏனாத்தூர் |
| 31 | வாலாஜாபாத் | வையாவூர் | 12 | தமிழன்னை | 5,00,000.00 | இந்தியன் வங்கி ஏனாத்தூர் |
| 32 | வாலாஜாபாத் | வையாவூர் | 12 | அறிஞர் அண்ணா | 5,00,000.00 | இந்தியன் வங்கி ஏனாத்தூர் |
| 33 | கடற்கரை பகுதி | சட்ராஸ் மாதாகோவில் | 12 | செம்பருத்தி | 9,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| 34 | கடற்கரை பகுதி | சட்ராஸ் மாதாகோவில் | 12 | முல்லை | 9,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| 35 | கடற்கரை பகுதி | சட்ராஸ் மாதாகோவில் | 13 | ரோஜா | 9,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| 36 | கடற்கரை பகுதி | சட்ராஸ் மாதாகோவில் | 14 | மல்லிகை | 9,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| 37 | கடற்கரை பகுதி | சட்ராஸ் மாதாகோவில் | 12 | தாமரை | 6,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| 38 | கடற்கரை பகுதி | புதுப்பட்டினம் குப்பம் | 16 | மல்லி | 6,00,000.00 | கனரா வங்கி கல்பாக்கம் |
| | **மொத்தம்** | | | | **1,83,28,000.00** | |

## 9. சிறப்பு செயல்பாடுகள்:

### கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:



சென்னை கிறித்தவ கல்லூரி, சென்னை இலயோலா கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், சென்னை ஸ்டெல்லாமேரிஸ் கல்லூரி போன்ற கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக ஆண்டுதோறும் வருவதுண்டு. இந்த ஆண்டு 10 மாணவ, மாணவிகள் களப்பனி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து சமூகப்பணியை ஆர்வத்தோடு கற்றுக்கொண்டதுடன் எஸ்.ஆர்.எம் மருத்துவக்கல்லூரி மருத்துவ முகாமில் கலந்துக்கொண்டு ஏழை, எளிய மக்களின் சுகாதார நலன் காக்கும் விழிப்புணர்வை மக்களுக்கு வழங்கினார்கள்.



### வேலைவாய்ப்பு முகாம்:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் மறைமாவட்ட தலித் பணியகம், செங்கை மறைமாவட்ட இளையோர் பணியகம் இணைந்து இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் 26.10.2019 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் அருட்பணி. மரியஅன்பு (தலித் பணியகம்), அருட்பணி.இ.அந்தோணிராஜ் (இயக்குநர்.சி.ஆர்.டி.எஸ்), திரு.மேத்யூ (உதயம் வேலைவாய்ப்பு மைய ஒருங்கிணைப்பாளர்) ஆகியோர்கள் இணைந்து இந்நிகழ்வை வழிநடத்தினார்கள். இம்மாபெரும் வேலைவாய்ப்பு முகாமிற்கு இளைஞர்கள், இனம்பெண்கள் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு பயனடைந்தனர்.

### தலித் கிறித்தவ விடுதலைப்பேரவை கூட்டம்:



தலித் கிறித்தவ விடுதலைப் பேரவைக்கான மாநில அளவிலான கூட்டம் சி.ஆர்.டி.எஸ் அலுவலகத்தில் 02.10.2019 அன்று நடந்தது. தலித் தலைமைத்துவம் மற்றும் அதிகாரப்படுத்துதல் என்ற தலைப்பில் இக்கருத்தரங்கானது நடைபெற்றது. ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் தலித் கிறித்தவ விடுதலைப்பேரவை செயலர்கள், தலித் குருக்கள் என 72 நபர்கள் இக்கருத்தரங்கில் கலந்துக்கொண்டு தலித் கிறித்தவர்களின் கல்விநிலை, பொருளாதாரநிலை, சமூகநிலை, ஆகியவற்றை பற்றிய கருத்துக்களையும், அனுபவங்களையும் பகிர்ந்துக்கொண்டார்கள். தொடர்ந்து தலித் கிறித்தவ விடுதலைப்பேரவைக்கான மாநில தலைவர், துணைதலைவர், செயலர், பொருளர், ஆகிய பதவிகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டு மாநில அளவிலான தலைவர், செயலர், பொருளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### மருத்துவ முகாம்:

சி.ஆர்டி.எஸ் நிறுவனமானது கடந்த ஓராண்டு காலமாக எஸ்.ஆர்.எம் மருத்துவமனையோடு இணைந்து கிராமப்புற ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவமுகாம்களை மாதந்தோறும் நடத்துகின்றது. பொதுமக்களுக்கான பொது மற்றும் சிறப்பு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு நோயாளிகளை இனம்கண்டு இலவச மருத்துவம் பெறுவதற்காக எஸ்.ஆர்.எம் மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வகையான மருத்துவ முகாம்களின்போது அளிக்கப்படும் சிகிச்சையின் விவரம்:

❖ பொது மருத்துவம் ❖ கண் மருத்துவம் ❖ காது, மூக்கு, தொண்டை மருத்துவம் ❖ தோல் மருத்துவம ❖ குழந்தை மருத்துவம் ❖ எலும்பு முறிவு மற்றும் இதயநோய் மருத்துவம் ❖ பல் மருத்துவம் ஆகிய மருத்துவ பிரிவுகளின் கீழ் மக்களுக்கு இலவச மருத்துவம் அளிக்கபடுகின்றது. கீழ்கண்ட கிராமங்களில் உள்ள ஏழை,எளிய மக்கள் இதுவரை இம்மருத்துவ முகாம்களின் மூலம் இலவச மருத்துவம் பெற்று பயனடைந்துள்ளனர்.

| வ.எண் | தேதி | ஒன்றியம் | கிராமம் | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 18.11.2019 | திருப்போரூர் | கழனிப்பாக்கம் | 84 |
| 2 | 25.11.2019 | உத்திரமேரூர் | நல்லூர் | 94 |
| 3 | 20.01.2020 | லத்தூர் | கடலூர்பெரியகுப்பம் | 137 |
| 4 | 21.01.2020 | லத்தூர் | செங்காட்டூர் | 173 |
| 5 | 11.02.2020 | திருப்போரூர் | திருப்போ ரூர் | 75 |
| 6 | 24.02.2020 | வாலாஜாபாத் | தாழம்பேடு | 114 |
| **மொத்தம்** | | | | **677** |

**முடிவுரை:**

செங்கை மறைமாவட்டத்தின் சமூக சேவை மையமான எம் சி.ஆர்.டி.எஸ் நிறுவனமானது கடந்த 29 ஆண்டுகளாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அடித்தட்டு கிராமப்புற மக்கள் மத்தியில் நலிவடைந்த மக்களின் வாழ்வு உயர, ஏற்றத்தாழ்வுகள் மறைய வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தில் பல்வேறு உரிமை சார்ந்த செயல்பாடுகளை முன்னெடுத்து வெற்றிகண்டுள்ளது. இந்நிறுவனத்தின் பல்வேறு வளர்ச்சிப்படிகளில் உறுதுணையாய் இருந்து நிறுவனத்தை வழிநடத்தும் நிறுவன தலைவர் மேதகு.ஆயர் டாக்டர். அ.நீதிநாதன் அவர்களின் ஆலோசனையும், நிறுவனத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து ஊக்குவித்து வழிகாட்டும் நிறுவனத்தின் துணைத்தலைவர் பேரருட்பணி. ஞா.பாக்கிய ரெஜிஸ் அடிகளார், பொருளர் தந்தை அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன் அடிகளார், பங்கு அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இலக்கு மக்கள், நன்கொடையாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட, கடைநிலையில் உள்ள மக்களுக்காக சமூக பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் எம் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்

## சி.ஆர்.டி.எஸ் நிர்வாக குழு

| வ.எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. | **மேதகு.ஆயர்.நீதிநாதன்** | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 101. | நிறுவன தலைவர் |
| 2. | **அருட்பணி. பாக்கிய ரெஜிஸ்** | ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 101. செங்கல்பட்டு மறைமாவட்ட பொதுபதில் குரு, | துணைத்தலைவர் |
| 3. | **அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்** | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 101. | பொருளாளர் |
| 4. | **அருட்பணி. அந்தோணிராஜ் சி.** | ஆர்.டி.எஸ் இயக்குனர். செங்கல்பட்டு கிராமப்புர மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் – 603 101. | செயலாளர் |
| 5. | **திரு. செல்வராஜ்** | ஆர்.என்.கண்டிகை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 6. | **திருமதி. ஸ்டெல்லா** | நெ.14/2, செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம் – 603306 | உறுப்பினர் |
| 7. | **அருட்பணி. மரிய அன்பு** | புனித பிரான்சிஸ் சேவியர் ஆலய பங்கு தந்தை, நெ.2/110, மாதா கோவில் தெரு, மதுவந்தாங்கல், காஞ்சிபுரம் மாவட்டம் – 603 204 | உறுப்பினர் |
| 8. | **சகோதரி. நம்பிக்கை மேரி** | புனித மரியாள் கன்னி மடம், செங்கல்பட்டு – 603 101 | உறுப்பினர் |
| 9. | **திரு. அந்தோணிதாஸ்** | நெ.55, விப்பேடு, மேல்கதிர்புர், காஞ்சிபுரம் மாவட்டம் – 603 502 | உறுப்பினர் |
| 10. | **திருமதி. கீதா** | நெ.584/3, பாலமுருகன் தெரு, இருங்குன்றப்பள்ளி, செங்கல்பட்டு மாவட்டம் – 603 002 | உறுப்பினர் |
| 11. | **திரு. பெஞ்சமின்** | நெ.74, புலிப்பாக்கம், தந்தை பெரியார் தெரு, செங்கல்பட்டு – 603 002 | உறுப்பினர் |

## எங்கள் நன்கொடையாளர்கள் அனைவருக்கும்
## நெஞ்சார்ந்த நன்றிகள்........

**Chengalpattu Rural Development Society - CRDS**
No: 199A/4, Behind RC Cemetary, Thimmavaram,
Kanchi High Road, Chengalpattu Dist - 603101. Tamilnadu, India.

+91 9445586020
+91 6379493429

crdskanchi@gmail.com
crdschengai@rediffmail.com
www.crds.net.in